REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 181

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 27உ. திங்கள் (11—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 28உ. செவ்வாய் (12—1—54)

'வெளிநாடுகளுக்கு நம்மவர் சென்றது உழைக்க: மற்றவர் சென்றது சுரண்ட!'

—(:)—

'இது, இன்று-நேற்று ஏற்பட்டதல்ல! தொன்றுதொட்டு வழக்கில் உள்ளது!'

'இந்த அரசாங்கம், காரில் போகிற அரசாங்கம்!'

'பிற நாட்டார் கேலிக்கஞ்சி, கைவண்டிக்காரர்களைப் பட்டினி போட்டுக் கொல்வதா?'

'காவேரி தண்ணீரை வீணாகக் கடலோடு சேர்ப்பதற்கு சர்க்கார் 'கொள்கை மாற்றம்' வேறு தேவையா?'

காமராஜரின் இதயத் துடிப்பும், சொல்லம்பும்!

சென்னை, ஜன. 11—

"தமிழ் நாடு மிகவும் வறுமை மிக்கவர்கள் உள்ள நாடு. இம்மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்குப் போனவர்கள், கூலி வேலைக்குத்தான் போயிருக்கிறார்கள்; இதர மாநிலங்களிலிருந்து போனவர்கள் உத்தியோகம், வர்த்தகம் ஆகியவைகளுக்காகப் போயிருக்கிறார்கள்; இது நெடு நாட்களாக இருந்துவரும் நிலை; இதைப் போக்குவதற்கு நாம் வழி காண வேண்டும்; இங்கிருந்து சென்றவர்களின் கஷ்டம், துன்பம் என்ன என்பதை உணர்ந்து அவற்றைப் போக்க அனுகூலம் காட்டி நாம் நடக்க வேண்டும்."

—இவ்வாறு, நேற்று, திருவாரூமையூரில் நடைபெற்ற ஏழாவது தமிழ் நாடு கிராம முன்னேற்ற ஊழியர்கள் மாநாட்டில் பேசுகையில், தோழர் காமராஜர் குறிப்பிட்டார். மாநாட்டிற்கு, தோழர் வி. கே. ராமசாமி முதலியார் தலைமை வகித்தார். இந்திய சர்க்கார் டெபுடி மந்திரி தோழியர் மரகதம்-சந்திரசேகரன் மாநாட்டைத் துவக்கி வைத்தார். தோழர் காமராசர் தொடர்ந்து பேசினார்:—

"இப்போது இங்கு கைவண்டி இழுப்பவர்களுக்கு பெருந் தொல்லை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சிலர் மோட்டாரிலும், இதர வாகனங்களிலும் போகவேண்டுமென்பதற்காக, 'குறிப்பிட்ட சில சாலைகளில், கைவண்டியை இழுக்கக்கூடாது; சுற்றிக்கொண்டு போக வேண்டும்,' என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது; சில சமயம் கைவண்டி இழுத்து வருபவர்கள் நிறுத்தப்பட்டுவிடுகிறார்களாம்.

"காரில் போகிறவர்களுக்கு வசதிகள் செய்ய, ஏழைகளை, சர்க்கார் இப்படி கஷ்டப்படுத்துகிறது. அப்படியானால், 'இந்த அரசாங்கம், காரில் போகிற அரசாங்கம்,' என்று தானே சொல்வார்கள்! காரில் போகிறவர்கள் வேண்டுமானால் சுற்றிக்கொண்டு போகலாம்—செலவாகப் போகிறது கொஞ்சம் பெட்ரோல்தான்.

"கைவண்டி இழுப்பவர்கள் ஏழைகள்; ஒரு வண்டிக்கு நான்கு பேர் வீதம் பிழைக்கிறார்கள்; அவர்களிடம் அனுதாபம் காட்டவேண்டும். கைவண்டி இழுக்கும் தொழில் கஷ்டமானது; வேறு பிழைப்பில்லாததால், இந்தக் கஷ்டமான வேலையைச் செய்கிறார்கள், சிலர்! 'இவர்கள் வண்டி இழுப்பது கஷ்டமானது,' என்று ஜீவகாருண்ய மனப்போக்கில் சொல்லிவிட்டு, அவர்களுக்கு வேறு பிழைப்புக்கு வழி செய்யாமலும், இந்த வேலையையும் செய்ய முடியாமலும் தடுத்து, அவர்களைப் பட்டினி போட்டுக் கொள்வது நியாயமா?"

"சென்னை துறைமுகத்திற்கே கைவண்டி போகத் தடையாம்! லாரி, மோட்டார்கள்தான் போகலாமாம்! வெளிநாட்டார், கைவண்டி இழுப்பவர்களைப் பார்த்து, 'இப்படியும் மக்கள் வேலை செய்வதா?' என்று நினைப்பார்கள் என்பதற்காகவே தடையாம்! ஆனால், கைவண்டி இழுப்பவர்களுக்கு வேறு வேலை செய்வதற்கு வழி இல்லையே?"

"டிராம்களை நிறுத்தி 1,500 தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்தாகிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை வளர்ந்து வருகிறது. அப்படி இருக்கும்போது, இருக்கும் வேலையைத் தடுத்துக் குறைப்பது சரியல்ல. கைவண்டி இழுப்பதில் 3 000 பேர்வரை நன்மை அடையலாம். இது மிகக் கஷ்டமான வேலை.'

தொடர்ந்து, காமராசர் பேசுகையில் கூறியதாவது:

"அரசாங்கம் இயந்திர முறையில் பழைய மாதிரியே இருக்கிறது. ஒரு மனு போட்டால் அதற்குப் பதில் வர 2, 3 மாத காலமாகிறது. சில சமயம் பதில் வராமல் போய்விடும். கர்ணத்திலிருந்து—கலெக்டர்வரை போய்வர கால தாமதமாகிறது. இது பழைய முறை, அது, 'பாராவது நம்மை ஏமாற்றிவிடப் போகிறார்களே,' என்று அந்நிய சர்க்கார் செய்து கொண்ட முறை; அந்த மாமூல் தான் இன்றும் இருக்கிறது. இந்த முறை மாறவேண்டும்."

"'மந்திரிகளுக்கு என்ன தெரியும்; நாங்கள் எழுதுவதில் தானே கையெழுத்துப் போடுகிறார்கள்' என்று சர்க்கார் அதிகாரிகள், குறிப்பாக ஐ. சி. எஸ். அதிகாரிகள் கூறுகிறார்கள். அவர்களை நான் ஒன்று கேட்கிறேன்—'காரணம் தரும் சட்டத்தில் தானே ஐ. சி. எஸ். அதிகாரிகள் கையெழுத்துப் போடுகிறார்'

(4-ம் பக்கம் பார்க்க)

மூன்று கோடி ஏக்கர் நிலம்

பாசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமாம்!

கோவை, ஜன. 11—

"ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், கூடுதலாக 3 கோடி ஏக்கர் நிலம் பாசனம் செய்வதற்காக எடுத்துக்கொள்ளப்படும்," என்று, இந்திய உதவி உணவு மந்திரி கிருஷ்ணப்பா, கல்லூரியின் சமூக சேவை அரங்கு ஒன்றை இன்று ஆரம்பித்து வைக்கையில் கூறினார்.

மேலும் அவர் சொன்னதாவது:—

"கடந்த 6 ஆண்டுகளில், 965 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியம இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், நாம் விவசாயத்தைப் புறக்கணித்ததுதான். இந்நாட்டில் 25 கோடி ஏக்கர் நிலத்தில் தான் விவசாயம் நடைபெறுகிறது."

"ஆங்கிலத்திற்குத் தடை என்பது தற்கொலைக்கொப்பானது"

—[o]—

பம்பாய் சர்க்கார் போக்கு: பட்டீல் எதிர்ப்பு

பம்பாய், ஜன. 11—

இவ்வாண்டிலிருந்து ஆரம்பப் பள்ளிகளிலும், இடைநிலைப் பள்ளிகளிலும், ஆங்கிலோ-இந்தியரைத் தவிர, மற்றவர்களுக்கு ஆங்கிலத்தைக் கொண்டு போதனையளிக்கும் முறையை ஒழித்துவிட பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்த முடிவு விவேகமற்ற செயல் என்றும், தற்கொலைக் கொப்பான செய்கை யென்றும் பம்பாய் மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எஸ். கே. பட்டீல் நிருபர்களிடம் கூறினார்.

"இந்த முடிவால், தகுந்த வெற்றி நீக்கு ஏற்படும்; எனவே, பம்பாய் அரசாங்கம், தங்கள் முடிவைப் புனராலோசனை செய்துபார்க்க வேண்டும்," என்று அவர், மேலும் சொன்னார்

"ஆங்கிலம் ஆங்கிலோ-இந்தியருக்கு மட்டுமல்லாமல், பல தலைமுறையாக அனைவருக்கும் பயன்பட்டு வந்திருக்கிறது," என்றார் பட்டீல்

ஆங்கிலோ-இந்தியரின் தலைவர், பட்டீலைச் சந்தித்து, பம்பாய் அரசின் முடிவின் காரணமாக எழுந்துள்ள கிளர்ச்சியில் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

"தேசியத்தை வளர்த்து ஒற்றுமையை நிலவச் செய்யவும் ஆங்கிலமும் பயன்படுகிறது," என்று அவர் குறிப்பிட்டார்.

கான் அப்துல் சமாத்கான் விடுதலை

காரச்சி, ஜன. 10—

பலூசிஸ்தானின் பிரபல அரசியல்தலைவர் கான் அப்துல்சமாத் கான் 5 ஆண்டு காலம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பின், இன்று குவெட்டா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

கான் அப்துல் கபார்கான் விடுதலையாகி 4 நாட்களுக்குள் இவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

தோழர் சமாத்கானுக்கு சிறைவாயிலில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

பலூசிஸ்தான் காந்தி என்று அழைக்கப்படும் அவர், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்; அவர் விடுதலை செய்யப்பட்டது, பாகிஸ்தான் சர்க்கார் முடிவு செய்திருப்பதையொட்டி எடுக்கப்பட்ட முயற்சியாகும்.

39,50,000 குழந்தைகள் பிறந்தன!

நியூயார்க், ஜன. 9—

கடந்த ஆண்டு அமெரிக்காவில் 39½ லட்சம் குழந்தைகள் பிறந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த ஏழு வருஷங்களாக, ஆண்டுதோறும், 35 லட்சம் குழந்தைகளுக்குமேல் பிறந்தன. கடந்த ஆண்டு பிறந்தவை 1950-ல் பிறந்தவைகளைவிட 50 சத விகிதம் அதிகமாகும்.

தாய் மொழியில் — பாட போதனை கூடாதாம்!

—(:)—

இந்திக்கு இழுக்கு நேரிடுமாம் — தாண்டனின் மொழி வெறி

குவாலியர், ஜன. 11—

"சர்வதேச எண்களை ஒழித்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக, தேவ நாகரீக எழுத்துக்களை உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்தி, அரசியல் சட்டத்தை தக்கபடி திருத்தும்படி கோரி இந்தி ஆதரவாளர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்," என்று முன்னாள் காங்கிரஸ் தலைவர் புருஷோத்தமதாஸ் தாண்டன் கேட்டுக்கொண்டார்.

"பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தாய் மொழியிலேயே பாடபோதனை செய்யவேண்டுமென்ற ஏற்பாடு, இந்தியின் வளர்ச்சிக்கு கேட்டை விளைவிக்கும்," என்று அவர் மேலும் சொன்னார்.

நம் நாடு

சென்னை 11—1—1954 திங்கள்

மலிவான விளம்பரம்!

புதிய கல்வித் திட்டத்தை, அமைச்சர் குழுவிற்குக்கூட அறிவிக்காமல், எதேச்சாதிகாரமாக ஆச்சாரியார், கிராம மக்களின்மீது திணித்ததின் காரணமாக, அவருடைய மதிப்பு தரைமட்டமாகிப் போனதை அனைவரும் அறிவர். அது, வெறும் எதிர்ப்பாக மட்டுமிராமல், முதல் அமைச்சர் பதவியை விட்டே வெளியேற வேண்டிய கட்டாயத்தை ஆச்சாரியாருக்கு உண்டாக்கியிருக்கிறது என்பதும் பகிரங்க இரகசியம். கிராம மக்களும், இதற்காக அமைச்சர் ஆச்சாரியாரை ஒவ்வொரு விநாடியும் சபித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தச் செல்வாக்குச் சரிவிலிருந்து எப்படியாவது தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என அமைச்சர் ஆச்சாரியார் மிக மிகத் தீவிரமாக யோசித்திருக்கிறார். தமது சென்ற நாள் வரலாற்றுச் சம்பவங்களை எல்லாம் ஒன்று விடாமல் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்திருக்கிறார். முன்னாள், அவர், சென்னை மாநிலத்தில் அமைச்சராக இருந்தபோது தாம் கைக்கொண்ட சம்பவம் ஒன்று அவர் மூளையில் மின்னல்போல் பளிச்சென்று தோன்றி இருக்கிறது. தோன்றியக் கணமே, அதை, 'அத்தரி பாச்சா' போல் பற்றிக் கொண்டு, கவர்னர் பெருமானின் கடாட்சத்தால், ஒரு அவசரச் சட்டமாக நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டார். அதுதான், 'விவசாயக் கடன் ஒத்திவைப்பு அவசரச் சட்டம்' பிறந்ததற்கான, பிரசவ அறை மர்மம்!

1938-ல், அன்பர் ஆச்சாரியார், இந்த மாநிலத்தின் பிரதமராக இருந்தபோது, இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கினார். கட்சிக் கருத்து வேற்றுமை பாராட்டாது, தமிழர் அனைவரும் அந்தப் போக்கை எதிர்த்தனர். எதிர்ப்பின் தரத்தையும், வேகத்தையும் கண்டு திக்குமுக்காடிப் போனார். சொந்த செல்வாக்குச் சரிந்து வருவதை விளக்கமாகக் கண்டார். இந்தி கட்டாயப் பாட நுழைப்பால் எழுந்த பொது மக்களின் கொதிப்பை மட்டுப்படுத்துவதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்துவதற்கு, விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்தார். ஆச்சாரியார் கனவு கண்டபடி, கட்டாய இந்தி எதிர்ப்பின் காரணமாக, பொதுமக்களிடம் அவருக்குச் சொந்தத்தில் ஏற்பட்ட செல்வாக்குச் சிதைவு, அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தால் கணிசமாக மாற்றமுறவில்லை. ஆனால், எதிர்ப்பின் தீவிரம் கொஞ்சம் தணிய வழி பிறந்தது என்பதுமட்டும் உண்மையாகும்.

அந்தக் காலத்து விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தால் நன்மை பெற்றவர்கள், பெரிய பெரிய நிலச் சொந்தக்காரர்களேயாவர். மிகச் சாமானிய விவசாயிகளில் ஐந்து சத விகிதத்தினர்கூட அந்தச் சட்டத்தால் நன்மையடைந்தார்கள் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. அதிலும், அந்தச் சட்டத்தின் எதிரொலியாக, ஏழை விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவுகிறவர்களின் நெஞ்சில் அச்சம் வளர்ந்தது. அதனால், ஏழை உழவர்களுக்கு, 'நாணயத்தைக் கொண்டு கடன் வாங்குவது என்பது அரிதாயிற்று. எனவே, கடன் நிவாரணச் சட்டம் ஏழை விவசாயிகளுக்கு 'ஒரு வரப்பிரசாதம்' என சாதாரண மக்கள் துவக்கத்தில் நம்பியது, காலப்போக்கில், அவர்களுடைய நன்மைக்குக் கேடு பயக்கும் பெரும் விலங்காக இறுதியில் முடிந்தது.

அதுவுமல்லாமல், மன்றமேறிய வல்லடி வழக்குகளும் ஏராளம். இந்த வழக்குகளிலும் பெரும்பாலானவை, முடிவில், கடன் கொடுத்த 'ஷைலாக்'குகளுக்குச் சாதகமாகவே முடிந்தன. அந்தச் சட்டத்தின் கீழ் தொடுத்த வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒரு தனி மன்றத்தையே சென்னை உயர்நீதி மன்றத்தில் உருவாக்க வேண்டிய கட்டாயமும் சர்க்காருக்கு ஏற்பட்டது.

எனவே, முன்னாள், ஆச்சாரியார் கொண்டுவந்த கடன் நிவாரணச் சட்டத்தினால் ஏழை விவசாயிகள் பெற்றது, லாபமல்ல; எல்லா வகையிலும் நஷ்டம், கஷ்டம்!

ஏழை விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து கைதூக்கிவிட்டுக் காப்பாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்தக் காலத்தில், ஆச்சாரியார், கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பது, அந்தச் சட்ட நடைமுறையிலிருந்து விளக்கமாகிவிட்டது. தனது சொந்த உயர்வு-தாழ்வை சரிகட்டிக் கொள்வது என்ற ஒன்றே ஒன்றை மட்டுந்தான் குறியாகக் கொண்டு, அன்பர் ஆச்சாரியார், அந்தச் சட்டத்தை அன்று கொண்டுவந்தார் என்பது பின்னால் திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. தனி நபர் ஒருவர் இழந்துவிட்ட வெகுஜன செல்வாக்கைத் திரும்பப் பெறுவதையே குறியாகக் கொண்டு செய்யப்பட்ட சட்டம், ஏழை விவசாயிகளின் குறைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பதில், அவர்களை மேலும் கடுமையான தொல்லைகளுக்கு ஆளாக்கிவிட்டது என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. எதிர்பார்க்கக்கூடியதே! தேள் கொட்டுவது, தேக ஆரோக்கியத்திற்கா? நிற்க,

புதிய கல்வித் திட்டத் திணிப்பால் சொந்த செல்வாக்கைப் பறிகொடுத்துத் தவிக்கின்ற அன்பர் ஆச்சாரியார், கிராம மக்களைத் திரும்பவும் தன் வலையில் வீழ்த்த 'கடன் ஒத்திவைப்பு' அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார். இந்தச் சட்டம், ஏழை விவசாயிகளுக்கு உருவான நல்ல பலன் தருமா, அல்லது, காலப் போக்கில், பரிகரிக்க முடியாத இன்னல்களைத் தருமா என்பதை ஒவ்வொருவரும் ஆராய்ந்துபார்க்க கடமைப்பட்டு இருக்கிறார்கள். திட்டம் தயாரித்தவரின் நோக்கையும்-போக்கையும், மற்றவர்களைக் காட்டிலும், நாம் நன்கறிவோம்; ஆகையால், திட்டத்தில் பிறர் கொள்ளும் ஐயப்பாட்டைக் காட்டிலும், நமக்குக் கொஞ்சம் கூடுதலாகத் தெரிவதில் ஆச்சரியமொன்றுமில்லை

ஏதோ, சில சாதாரணமான சலுகைகளை, சொந்த விஷயத்தில் காட்டுகிறார் அல்லது காட்டுவதுபோல் நடிக்கிறார் என்பதற்காக, திட்டத்தை நுணுகி ஆராய்ந்து பார்க்காமலேயே, கண்ணை மூடிக்கொண்டு, 'திட்டம் பிரமாதம்,' 'ஏழை விவசாயிக்குக் கிடைத்த துன்பம் நீக்கி' என்றெல்லாம் சிலர் பாராட்டுவதுபோல், திட்டத்தை நம்மால் பாராட்டிப் பேச முடியவில்லை. 'கொஞ்சம் பழஞ் சோறு இருந்தால் என் பசிக்குப் போடுங்கள்! நான் உங்களுக்குப் பசி மருந்து அளிக்கிறேன்,' என்றானும், ஒரு பல நாள் பட்டினி! அவனைப் போன்றார்தான் சிலர், ஆச்சாரியாரின் அவசரச் சட்டத்தை மிகைபட பாராட்டியும், அந்த அவசரச் சட்டம் உண்டானதற்கும் தங்கள் கிளர்ச்சிதான் காரணமென்றும் உரிமை கொண்டாடுகிறார்கள். அது பற்றி நமக்குக் கவலை இல்லை. காலப்போக்கில், சட்டத்தால் தங்களுக்கு உண்டான விளைவு நன்மையா, தீமையா என்பதை, ஏழை விவசாயிகள், ஓராண்டு கழித்து உணர்ந்துகொள்வர். இன்றைக் கொண்டாட்டத்தின் முழு விளைவு, அப்பொழுது விளக்கமாகத் தெரிந்துவிடும். நிற்க,

விவசாயக் கடன் ஒத்திவைப்பு அவசரச் சட்டம், ஒரு மசோதா உருவில் சட்டசபைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது பற்றி எழுந்த விவாதத்தில் கலந்துகொண்ட சட்டசபை ஐ. மு. பிரமுகர் எஸ். டி. ஆதித்தன் அவர்கள்,

"விவசாயிகள் கடன் ஒரு வருஷம் ஒத்திவைக்கப்பட்டபோதிலும். விவசாயிகளுக்குக் கடன் உதவியே கிடைக்காமல் போகும் நிலைமையை சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகையால், இந்த மசோதாவினால் நன்மையும், அதைப் போல் பாதகமும் ஏற்படும். இந்நிலையில் கிராமாந்திரக் கடன் வசதி பாதிக்காது என்று சர்க்கார் உத்தரவாதம் தர முடியுமா?" என்று கேட்டிருக்கிறார்.

கடன், ஓராண்டு காலத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது என்பதுதான் மசோதாவின் அடிப்படை. விவசாயிகள் பட்ட கடனை வசூலிக்க, இந்த ஓராண்டு காலத்திற்குள், சட்டப்படி, எந்தவித நடவடிக்கையையும் கடன் கொடுத்தவர்கள் மேற்கொள்ளக்கூடாது என்பதுதான் சட்டத்தில் உள்ள நிபந்தனை. இதனால், இந்த ஓராண்டு இடைக்காலத்தில், முதலுக்குச் சேருகின்ற வட்டியும் சேர்த்து, அடுத்த ஆண்டு துவக்கத்தில் வழக்குத் தொடுத்து, சட்டப்படி ஜப்தி செய்து வசூலித்துக்கொள்ள, கடன் கொடுத்தவர்களுக்கு இருக்கும் வாய்ப்பு எந்த வகையிலும் பாதிக்கப்பட்டு விடவில்லை. எனவே, விவசாயிக்கு எப்பொழுதும் இருக்கிற கடன் தொல்லை நிரந்தரமாகத்தான் இருக்கப் போகிறது.

தலைச்சுமை தூக்கிச் செல்லுகிறவர்கள், சுமையின் பளு தாங்க முடியாத நிலையில், வழியில் உள்ள கருங்கல் சுமைத் தாங்கியின்மீது, கொஞ்சநேரம் தலைச் சுமையை இறக்கி வைத்து விட்டு, இளைப்பாறி, திரும்பவும் சுமையைத் தூக்கிச் செல்வதற்கு எந்த அளவு அந்தச் சுமைத் தாங்கி பயன்படுகிறதோ, அந்த அளவிற்குத்தான், ஏழை விவசாயிக்கு இந்த 'கடன் ஒத்திவைப்பு' ஜால வித்தையும் பயன்படப் போகிறது. அதைத் தவிர வேறு உருவான பயனை இந்தச் சட்டத்தின் மூலம் ஏழை விவசாயிகள் பெறப்போவதில்லை. இந்த அற்பப் பயனைக் கொண்டு, கனம் ஆச்சாரியார் செயலை, எப்படி, விவசாயிகளின் நிலையான நலனில் அக்கரை கொண்டுள்ளவர்கள் போற்றிப் புகழ்வார்கள் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மேற்கூறிய சுமைத் தாங்கியாவது, தலைச் சுமையைத் தூக்கி வருகிறவர்கள் நின்றுகொண்டே சுமையைக் கொடுக்க, ஏந்திக்கொள்ளும் நிலையில்—சரிநிகர் உயரத்தில் இருக்கிறது. மீண்டும், சுமையைத் தங்கள் தலையில் தூக்கிக்கொள்வதற்குப் பிறர் துணையை நாட வேண்டிய அவசியமில்லாமல் அமைந்திருக்கிறது. சுமைத் தாங்கியிலேயே மற்றொரு வகையுண்டு—அதாவது—தலைச்சுமையைக் குனிந்து கீழே இறக்கவேண்டிய உயரத்தில் குறைந்த சுமைத் தாங்கி! உடனடியாக இறக்கி விட்டால் போதுமென்ற கருத்தோடு தலைச் சுமையை, இந்த மட்டமான சுமைத் தாங்கியின்மீது இறக்கி வைத்துவிட்டு இறக்கிய சுமையை மீண்டும் தலையில் தூக்கி வைப்பதற்கு, வழிப்போக்கர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நிலை, சுமை தூக்கிகளுக்கு இதனால் ஏற்படும் இந்த இரண்டாம் இன சுமைத் தாங்கியின் ரகத்தைச் சேர்ந்ததுதான், அமைச்சர் ஆச்சாரியாரின் 'கடன் ஒத்திவைப்பு'ப் புரட்டு என்பதே மிகமிகப் பொருத்தமுடையதாகும்!

இந்த மட்டமான சுமைத் தாங்கியின்மேல், இறக்கி வைத்த தலைச் சுமையை, மீண்டும் தம் தலையில் தூக்கிக்கொள்ள பிறர் தயவை நாடுகின்றவர் நிலையில்தான், இன்று, ஏழை விவசாயிகளின் நொந்த வாழ்வு இருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இவர்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டுமானால், அவர்களுடைய கடனை தொலைத்து நிலையான உருவான பரிகாரம் தேடியாக வேண்டும். இதைச் செய்வதில்தான் ஒரு சர்க்காருடைய நல்லெண்ணமும் வெளியாகும். இதை விட்டுவிட்டு, ஏதோ பெரிதாக, ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்து விட்டது போலவும், அதன் பலனாக விவசாயிகள் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடும் என்று பேசித் திரிவதும், இதனை யார் செய்வதாக இருந்தாலும், அது, வடிகட்டின அரசியல் சூதாட்டமேயாகும் என்றே நாம் கூறுகிறோம். நிற்க,

இந்தக் கடன் ஒத்திவைப்பின் காரணமாக 'வாய் தவிடும் போய், அடுப்பும் அணைந்தது' என்ற கதையைப்போலத்தான், ஏழை விவசாயிகளின் நிலையும், ஓராண்டு கழித்து ஆகப்போகிறது என்பதை எண்ணும்பொழுது, நமக்கு வேதனை பிறக்கிறது

'விவசாயி' என்ற சொல்லுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையோ, விரிந்த ஒன்றாக இருக்கிறது. 'குழந்தையைச் சாக்கிட்டு தாய் விழுங்கினாள்' என்பதுபோல, 'ஏழை விவசாயி' என்று கூறி, பல துறையிலும் ஈடுபட்டு பொருள் குவிக்கும் நிலப் பட்டாதார் அனைவரையும் 'விவசாயி' பட்டியலில் சேர்த்திருப்பது, முதல்தரமான மோசடியாகும். இந்தக் கோணத்தில் இருந்து நோக்கினாலும், இந்த மசோதாவின் மூலம் யார் யாருக்கு உதவி செய்ய வேண்டுமென்று அமைச்சர் ஆச்சாரியார் உள்ளத்தில் கொண்டிருக்கிறார் என்பதை ஒருவாறு நாம் யூகித்துக்கொள்ளலாம்.

அதாவது, ஆயிரம் ஆயிரமாக வருமானவரி கட்டுகிறவர்கள், விற்பனை வரி தருகிறவர்கள், தொழில் வரி செலுத்துகிறவர்கள்—ஆகிய தொழில் துறையினர் அனைவருக்கும், ஒரு ஐந்து பத்து சென்ட் புஞ்செய் - நஞ்செய் நிலமிருந்து, அதற்கு ஒரு பட்டாவும் இருந்தாலும் போதும்—அவர்களும் உண்மையான 'விவசாயிகள்' ஆகி விடுகிறார்கள். அவர்களும், இந்த அவசரச் சட்டத்தின் மூலம் பயன்பெறும் நிலை பெற்று விடுகிறார்கள்.

இந்த அவசரச் சட்டத்தின் கீழ், கீழ்க்கோர்ட் உத்தரவை நிறைவேற்றத் தடை விதிக்க வேண்டுமென்று, கடலூர் செஷன்ஸ் நீதிபதி முன் ஒரு விவசாயி' வியாபாரி கொடுத்த மனுவின் மீது, நீதிபதி கூறிய தீர்ப்பை வாசகர்கள் கவனிக்க வேண்டுகிறோம். அது இது:—

"ஒரு விவசாயி என்றால், அவன் விவசாயத்திலேயே தொழில் செய்து, அதைக் கொண்டே ஜீவிப்பவர். பிரதிவாதிக்குள்ள மூன்று நிலங்களில், ஒன்றில், எண்ணெய் மில் போடப்பட்டிருக்கிறது. இந்த நிலத்திற்கு அடுத்தாற்போலுள்ள நிலத்தில் புன்செய் மகசூல் செய்து வரப்படுகிறது. இப்பிரதிவாதி எண்ணெய் வியாபாரம் செய்து வருவதற்குப் போதிய சாட்சியமிருப்பதோடு, அதன் விளைவாக இவருக்கு ரூ 10,000 வருமானமும், சுமார் ரூ. 30,000 கொள்முதலுக்கு விற்பனை வரியும் செலுத்துவதற்குப் போதிய சாட்சியமிருக்கிறது. ஆனால் நிலத் தீர்வையோ, ரூ. 2-தான் செலுத்துவதாயும், இக்காரணங்களால், இவரது முக்கிய ஜீவனம் வியாபாரம் மூலம்தான் எனத்தெளிவாக விளங்குகிறது. ஆகவே இவர் விவசாயி என்று சொல்லப்படுவதற்கு யாதொரு முகாந்தரமும் ஏற்படவில்லை. தவிரவும், இவர் வியாபாரத்தையே முக்கிய தொழிலாகவும், விவசாயத்தைப் பொழுது போக்காகவும், இஷ்டவேலை

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டா உமேவைத்திருப்பதால் இவரை விவசாயி என்று கூறுவது நியாயமல்ல" என, கருத்தைத் தெரிவித்தார்.

அவசரச் சட்டம், முறையான சட்டமாகி, சட்டப் புத்தகத்தில் இடம் பெறுவதற்குள்ளாகவே, இந்தச் சட்டத்தினால், யார், முதல் முதலாகப் பயன் பெற முனைந்துள்ளார் என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும். இந்தப் போக்கு, நாட்டில் உள்ள கொடுக்கல்-வாங்கல் துறையில், காலப் போக்கில், கேடு பயக்குமா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்றுள்ள சமுதாய அடிப்படை, தனி நபர் சொத்துரிமையை 'நியாயம்' என ஒப்புக் கொண்டுள்ள ஒன்றுகும். இந்த அடிப்படையின் மீது தான் தனி நபர் உறவு முறையும் இருந்து வருகிறது என்பது, மறுக்க முடியாத உண்மையாகும்.

அடிப்படையைத் தலைகீழாக அல்லது குறிப்பிடத் தகுந்த வகையில் மாற்ற முயற்சிக்காமல், அதை அப்படியே நிலை பெற்றிருக்கப் பார்த்துக் கொண்டு, அதன் விளைவான உறவு முறையில் மட்டும் மாற்றஞ் செய்ய முன்வருவது முதல்தரமான அரசியல் சதியாகும்.

எது எக்கேடு கெட்டாலும், எவர் எப்படி குட்டிச்சுவரானாலும், தமக்கு அதுபற்றிக் கவலை இல்லை; எப்படியாவது இழந்த கிராம மக்கள் மதிப்பை ப்பெற்றுவிட்டால் போதும் என்ற வஞ்சக நெஞ்சோடு தான் அமைச்சர் ஆச்சாரியார் இந்தக் கடன் மசோதாவை புகுத்தியிருக்கிறார் என்பதே நமது கருத்து. ஏழை உழவர்களுக்கும் இதனால், காதொடிந்த ஊசியளவும் நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதும் கலங்கரை விளக்கமாகும்.

ஏழை உழவர்களைக் கடன் தொல்லையில் இருந்து காப்பாற்றி, அவர்கள் வாழ்வில் வளம் பெருகச் செய்யவேண்டுமென்ற எண்ணம் அமைச்சர் ஆச்சாரியாருக்கு உண்மையிலேயே இருக்குமானால் அதை, ஏழைகளுக்குக் கிடைக்கும் கடன் வசதிகளை நிலைகுலையச் செய்வதினால் சாதிக்கக்கூடிய காரியமல்ல. சர்க்காரே நேரடியாக ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து, பலத் தவணைகளில் வசூலித்துக் கொள்ள ஏற்கனவே உள்ள கூட்டுறவு வசதிகளை விரிவாக்க முன்வர வேண்டும். நில உரிமையிலும் புரட்சிகரமான மாற்றம் செய்ய சர்க்கார் முனையவேண்டும். இதை விட்டுவிட்டு, ஆச்சாரியார் எடுத்துக் கொள்ளும் முயற்சி சொந்தத்திலை மலிவாக விளம்பரம் பெற செய்யப்படும் முயற்சியே என்று நாம் குற்றம் சாட்டுகிறோம். இது பற்றி இன்னும் விரிவாகப் பின்னர் எழுதுவோம்.

இந்திய மாணவர்களுக்கு விவசாயப் பயிற்சி

இந்திய மாணவர்களுக்கு விவசாயப் பயிற்சி அளிக்க நியூசிலாந்து முன்வந்துள்ளதென்ற செய்தியை, மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் தெரிவித்து, அவர்களின் யோசனையைக் கேட்டுள்ளது.

ஆந்திர மந்திரிகள் சம்பளம்

முந்திய முடிவு மாற்றப்பட்டது

கர்நூல், ஜன. 9—

மந்திரிகள் சம்பளம் பற்றிய மசோதாவை, கவர்னர் அனுப்பிய செய்திப்படி, ஆந்திர சட்டசபை புனராலோசனை செய்து, மந்திரிகள் சம்பளத்தை ரூ 500-லிருந்து ரூ 1000-மாக மாற்றியது. எதிர்க் கட்சியைச் சேர்ந்த 50 பேர் சபையைவிட்டு வெளியேறினர்.

இதுபற்றி புனராலோசனை செய்யக் கூடவேதந்த கவர்னருக்கு அதிகாரமில்லை எனக் கூறிய தோழர் நாகி ரெட்டியின் கேள்விக்கு சபாநாயகர் பதிலளிக்காது போகவே அவர் சபையை விட்டு வெளியேறினார்.

* * *

தலைநகர் பிரச்னை :
5 ஓட்டு வித்தியாசத்தில் சர்க்காருக்கு வெற்றி

கர்நூல், ஜன. 8—

ஆந்திரத் தலைநகர் கர்நூலில் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் திட்டம் சம்பந்தமாக பட்ஜெட் மானியக் கோரிக்கை, ஆந்திர மாநில அசெம்பிளியில் நிறைவேறியது. கிருஷிக்லோக் கட்சி கொண்டுவந்த வெட்டுப் பிரேரணை 5 ஓட்டுக்களால் தோற்கடிக்கப்பட்டது.

வெட்டுப் பிரேரணை ஓட்டுக்கு விடுவதற்குமுன் தம் சர்க்கார் மீது நம்பிக்கை ஓட்டெடுக்கவேண்டுமென்று முதன் மந்திரி டி. பிரகாசம் கூறினார். சபையினருக்கு ஆச்சரியமளிக்கக் கொடுத்தது.

இவ்வாறு கூறியதால் கிருஷிக் லோக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஒருவர் தம் கட்சியின் வெட்டுப் பிரேரணைக்கு எதிராக ஓட்டளித்தார்; மற்றொருவர், ஓட்டளிக்கையில் வெளியே போய்விட்டார். எனினும், நம்பிக்கைப் பிரேரணைமீது ஓட்டெடுக்க சபாநாயகர் அனுமதிக்கவில்லை. வெட்டுப் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐவர் சர்க்காருக்கு எதிராக ஓட்டளித்தனர்; எனினும் சர்க்கார் வென்றது. முடிவாக விஜயவாடா, குண்டூருக்கு தலைநகரை மாற்றக் கோரிய பிரேரணை தோல்வியுற்றது.

இதன் பிறகே அசல் மானியக் கோரிக்கை சட்ட சபையில் நிறைவேறியது.

திருநெல்வேலி வட்டம் ஆதிதிராவிட மகாஜன சங்கம்

தாராவி, (பம்பாய்) ஜன. 8—

1—1—54ல், மேற்படி சங்க பம்பாய் கிளையின் அமைப்புக் கூட்டம் தாராவி, வாழைக்கட்டவாடி, களக்காடு வட்டார விவசாயச் சங்க அறையில் தோழர் வி. என். டி. ராஜா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. ப. மந்திரமூர்த்தி, பி. மந்திரமூர்த்தி, வி. எஸ். ராஜ், வ. வள்ளிநாயகம் ஆகியோர் பேசினர். பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

3—1—54ல், தோழர் ம. ப. மந்திரமூர்த்தி தலைமையில், சங்க மூன்றாவது நிர்வாகக் கூட்டம், நடைபெற்றபோது, சங்க சட்ட திட்டங்களை உருவாக்க எழுவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டதுடன், சங்கத் திறப்பு விழாவை 26—1—54ல், தாராவி, வாழைக்கட்டவாடி மைதானத்தில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. பம்பாய் சங்கத்தை நாயகத்து தலைமையிலுள்ள சங்கத்துடன் இணைத்து கிளையாக ஒத்துக்கொள்ள வேண்டி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 9—

தூத்துக்குடி சதிவழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விவரம் தொடர்ந்து தரப்படுகிறது :—

58-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பில், 58-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ராஜலட்சுமி அம்மாள் கூறியதாவது :—

"பிரசவத்திற்காக வைகாசி மாதம் நான், தூத்துக்குடியிலுள்ள என்னுடைய தகப்பனார் வீட்டுக்கு வந்திருந்தேன்; தகப்பனார் ஆபீசுக்குப் போன பின்பு கதவைத் தாளிட்டு, கூடத்தில் உட்கார்ந்திருந்தேன்; உதவிக்காக, என் வீட்டு சமையற்காரரின் உறவினள் சோமசுந்தரி அம்மாள் இருந்தாள்; காலை 10 மணி சமாருக்கு, பத்து—பதினைந்து பேர் கூட்டமாக கூச்சலிட்டுக்கொண்டு வந்து, கதவைப் பலவந்தமாகத் திறந்துகொண்டு வந்தனர்; அவர்கள் மின்சார ஸ்விட்ச் போர்டுகளையும், பல்புகளையும், போட்டோக்களையும், படங்களையும் உடைத்தார்கள்; நான் கூச்சலிட்டேன்; ஒருவர் கருப்புச் சட்டை அணிந்து, கழி வைத்திருந்தார்; அரிவாள் வைத்திருந்த இன்னொருவர், என்னைப் பிடித்துத் தள்ளி, சுவற்றுடன் சுவராய்ச் சாய்த்து, இரும்புப் பெட்டியின் சாவியைக் கொடுக்குமாறும், கொடுக்காவிடில், கொன்றுவிடுவதாகவும் மிரட்டினார்; இந்தச் சமயத்தில், சமையலறையில் இருந்த சோமசுந்தரி அம்மாள் ஓடிவந்து என்னை இறுகிக் கட்டிக்கொண்டாள்; சோமசுந்தரி அம்மாளுக்குத் தோளிலும், கை மணிக்கட்டியிலும் இரண்டு அடிகள் விழுந்தன; பிறகு அவள், வீட்டின் பின்புறப் பக்கமாக ஓடினாள்; அரிவாளைக் கையில் வைத்துக் கொண்டிருந்தவர், என்னுடைய பொன் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்; இந்தச் சங்கிலியில் தாலிகளும், தங்கக் குண்டுகளும் இருந்தன; இரண்டாக அறுந்த சங்கிலியை எடுத்துக் கொண்டு அவர், தொட்டில் பக்கம் சென்று தொட்டிலில் கட்டப்பட்டிருந்த கொசு வலையை நீக்கி, அரிவாளை உயர்த்தினார்; குழந்தையைக் கொல்ல வேண்டாம் என்று நான் சத்தம் போட்டேன்; நடையில் கழியை வைத்துக் கொண்டிருந்தவர், 'அருணாசலம், குழந்தையைக் கொல்லாதே; வந்துவிடு,' என்றார்; பிறகு, அரிவாள் வைத்திருந்தவரும், அவரது கூட்டமும் போய்விட்டது; கூட்டம் போனதும், சோமசுந்தரி அம்மாள் என்னிடம் வந்து, 'கையில் கழிவைத்திருந்தவர், என்னை அடித்து கைவளையலைப் பிடித்திழுத்ததாகவும், என் சங்கிலியில் முக்கால் பாகத்தை இழுத்ததாகவும், சங்கிலியும் மூன்று தங்கக் குண்டுகளும் நடைக்குச் சமீபத்தில் இருந்ததை நான் பார்த்ததாகவும், இரண்டு திருமாங்கல்யங்களும், ஒரு தங்கக் குண்டும் எடுத்துக் கொண்டு போகப்பட்டுவிட்டன,' என்றும் தெரிவித்தாள்; பகல் 12 மணிக்கு தாத்தா திரும்பி வந்ததும், நடந்ததை அவரிடம் சொன்னேன்; அவர் உதவியுடன் போலீஸுக்கு புகார் செய்தேன்; சப்-ஜெயிலில், அரிவாள் வைத்திருந்தவரை, நான் அடையாளம் கண்டுபிடித்தேன்; அவர்தான் சங்கிலியைப் பிடித்திழுத்தவர்."

ராஜலட்சுமியை வழக்கறிஞர் திரு எம். நெல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தார்.

59-வது சாட்சி

பிறகு 59-வது சாட்சியாக சோமசுந்தரி அம்மாள் விசாரிக்கப்பட்டபோது, கூறியதாவது :—

"நான் புதுக்கிராமத்தில் வசிப்பவள்; சமையலறையில் இருந்தபோது, ராஜலட்சுமியின் கூச்சல் கேட்டு, ஓடினேன்; அரிவாள் வைத்திருந்தவர் ராஜலட்சுமியை வெட்டிவிடுவார்," என்று பயந்து, அவளை இறுகக் கட்டிக்கொண்டேன்; கழி வைத்திருந்தவர் என் தோளிலும், கையிலும் அடித்துவிட்டதால், நான் கொல்லைப்புறம் ஓடிவிட்டேன்; என் கையில் இருந்த 8 வளையல்களைத் தென்னைமரப் பக்கம் விட்டெறிந்தேன்; கையில் இருந்த ஒரு வளையலை கழி வைத்திருந்தவர் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்; கழுத்தில் இருந்த சங்கிலியைப் பிடித்து இழுத்ததில், முக்கால் பாகம் அவர் வசம் போய்விட்டது; குழந்தையைக் கொல்கிறானே' என்ற சத்தம் கேட்டு உள்ளே சென்றேன்; என்னைக் கழியால் அடித்தவர், 'அருணாசலம் வெளியே வந்துவிடு' என்று சத்தம் போட்டார்: பின்னர் அரிவாள் வைத்திருந்தவர் போய்விட்டார்."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"மூன்று வளையல்களையும் மத்தியானம் என் பையன் எடுத்துக் கொடுத்தான்."

60, 61, 62 வது சாட்சிகளாக முறையே பாஸ்கரன், அப்பாஸ் மரைக்காயர், எம். பரமசிவம் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர்.

63-வது சாட்சி

சென்னை அரசாங்கத் தந்தி நிலையத்தில் தந்தி அடிக்கும் வேலை பார்க்கும் வி. நாகராஜய்யர், 63-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

"நான் தூத்துக்குடி புதுக்கிராமம் பெருமாள் தெருவில் வசிக்கிறேன்; 15-7-53 தேதி காலை சமார் 9-மணிக்கு நான் இல்லத்திலிருந்த போது சுமார் 15 பேர் கொண்ட ஒரு கூட்டம் மேல்புறமிருந்து வந்து, வீடுகளில் கற்களை வீசியது; என் வீட்டின் மீது ஒருகல் விழுந்தது; உடனே வீட்டின் கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிவிட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தேன்; பின்னர் அக்கூட்டம் போய்விட்டது; அதன் பிறகு சுமார் 10 மணிக்கு மற்றொரு கூட்டம் கற்களை வீசிக்கொண்டும், கூச்சல் கிளப்பிக் கொண்டும் வந்தது; உடனே என் மனைவியையும் இருகுழந்தைகளையும், அடுத்த வீட்டிலிருந்த பெண்களோடு கொண்டுபோய் விட்டேன்; என் மனைவி, அன்று, என்னைக் குளிப்புக்காக இரண்டு வட தங்கச் சங்கிலி, நான்கு தங்க வளையல்கள், ஒரு மூக்குத்தி, ஒரு போலி முத்து மாலை ஆகியவைகளை கழற்றி ஒரு தகரப் பெட்டியில் போட்டு, அப்பெட்டியை வீட்டு நலமாரியில் வைத்திருந்தாள்; என் மனைவியையும் குழந்தைகளையும் அடுத்த வீட்டில் இருக்கச் செய்துவிட்டு, திரும்பி என் வீட்டுக்கு வந்தபோது, கூட்டத்தைச் சேர்ந்த 15 பேர்கள் பின் வாசல் வழியாக என் வீட்டுக்குள் நுழைந்து, வீட்டிலிருந்த வானொலிப் பெட்டி, பாத்திரங்கள், தண்ணீர் தொட்டி முதலிய பொருள்களை உடைத்து சேதப்படுத்தினது; கடிகாரம் நகைகள் வைக்கப்பட்டிருந்த தகரப்பெட்டி முதலியவைகளை தூக்கிக் கொண்டுபோய்விட்டது; அக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் என்னைக் குத்திவிடுவதாக இரும்புக் கம்பியைக் காட்டிப் பயமுறுத்தினார்; அக்கூட்டத்தில் 81, 83, 85 வது எதிரிகள் இருந்தனர்."

64-வது சாட்சி

தூத்துக்குடி சுந்தர ஆச்சி 64-வது சாட்சியாக விசாரிக்கப் பட்டபோது அவர் கூறியதாவது :

"என்னுடைய பேரன், 15—7—53ந் தேதி, தெருவில் கிடந்ததாக ஒரு தகரப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தான்; அப்பெட்டியில், இரண்டு வட தங்கச் சங்கிலி, நான்கு தங்க வளையல்கள் ஒரு மூக்குத்தி ஒரு போலி முத்துமாலை ஆகியவைகள் இருந்தன; அவைகளில் தங்கச் சங்கிலி, தங்க வளையல்கள் ஆகியவற்றை என்னுடைய சகோதரர் குமாரசாமி நாடாரிடம் 7 நாட்கள் கழித்துக் கொடுத்து விற்கச் சொன்னேன்; ஏழு நாட்களாக, எவரும் தங்களுக்குச் சொந்தமென வந்து அந் நகைகளைக் கேட்கவில்லை. போலீசார் வந்து அவைகளை வாங்கிச் சென்றனர்."

65-வது சாட்சி

அடுத்தபடியாக, 88 வயதுள்ள ஈ. குமாரசாமி நாடார் 65-வது சாட்சியாக விசாரிக்கப் பட்டபோது கூறியதாவது :

"என் சகோதரி, தங்கச் சங்கிலி, 4 வளையல்கள் ஆகியவற்றை விற்பனை செய்யக் கொடுத்தாள்: நகைகளைப் போலீசார் வந்து கைப்பற்றிச் சென்றனர்."

66-வது சாட்சி

பின்னர் செயினலாப்தீன் என்பவர் (பவுண்டன் பேனா செம்மை செய்வோர்) 66-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது :—

"ஆத்தி என்பவர், 15-7-53ந் தேதி பிற்பகல் 3 மணிக்கு ஒரு (டைம்பீஸை) கடிகாரத்தைக் கொண்டுவந்து, செம்மை செய்வதற்கு ரூ. 2 கூலி பேசி கொடுத்தார்; அதை அன்று இரவு 10 மணிக்குப் போலீசார் வந்து கைப்பற்றிச் சென்றனர்," என்று கூறி, 83-வது எதிரி ஆத்திமுத்துவை அடையாளம் காட்டினார்.

சாட்சிகளை அரசாங்கத் தரப்பில் கூட்டு அரசாங்க வழக்கறிஞர் திரு. டி. திண்ணப்பிரம் பிள்ளை விசாரணை செய்தார்.

எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் திருவாளர்கள் எம். நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. தங்கசாமி, பி. என். கூத்தப்பா பிள்ளை, வி. என் கந்தப்பா ஆகியவர்கள் குறுக்கு விசாரணை செய்தனர்.

குறித்துக் கொள்ளுங்கள்!

சென்னை, ஜன. 8—

தஞ்சை பண்ணையாள் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் அப்பீல்களைப் பற்றிய புள்ளி விவரங்களை, இன்று, ரெவின்யூ மந்திரி சட்ட சபையில் தெரிவித்தார்.

சமரச அதிகாரியிடம் மொத்தம் 17,661 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவாம்.

வாரதாரர்கள் 12,256-ம், பண்ணையாளர்கள் 3,721-ம், நிலச் சுவான்தாரர்கள் 2,262 மனுக்களும் தாக்கல் செய்துள்ளனர்.

ரெவின்யூ கோர்ட்டுக்கு மொத்தம் வந்துள்ள வழக்குகள் 1,839.

நடனக் கலை யுவதிகளுக்கு அறிவுரை!

சென்னை, ஜன. 7—

"நடனக் கலையை மேற்கொண்டுள்ள யுவதிகள், காலாகாலத்தில் மணந்து கணவர்களை கூட்டிவைக்க வேண்டும்," என்று மதுரையிலக்கு மந்திரி தோழியர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கூறியுள்ளார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

(28—12—53) தொடர்ச்சி ரூ.	10,228—9—7
அதிகாரப்பட்டி தி. மு. கழக அனுதாபிகள்	2—8—0
காரைக்குடி ஏ. பி. ராசன்	1—0—0
சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்	5—8—0
சின்ன சேலம் ஏ. அம்பாயிரம்	5—0—0
,, வி. ஏ. சாமிநாதன்	5—0—0
,, சி. வாசுதேவன்	5—0—0
,, என். சுப்ரமணியன்	2—0—0
,, செ. ராமசாமி	2—0—0
,, வி. அண்ணாதுரை	1—0—0
,, இரா. வெங்கடாசலம்	1—0—0
,, எஸ். சுப்ரமணியம்	1—0—0
,, எஸ். கே. பரமசிவம்	1—0—0
,, வி. வி. நடராசன்	1—0—0
,, சி. கருப்பன்	1—0—0
,, எஸ். பொன்னுசாமி	1—0—0
,, டி. எம். சின்னு	1—0—0
,, கோபாலகிருஷ்ணன்	1—0—0
,, மூக்க அதிகாரி	1—0—0
,, விஸ்வநாதன், ஆறுமுகம்	1—4—0
மாயவரம் தி. மு. கழகச் சார்பில், தோழர் மு. கருணாநிதி கலந்து கொண்ட பொதுக்கூட்ட வசூல்	30—5—3
விளாங்குளம் தி. மு. கழகம், தோழர் மு. கருணாநிதியிடத்தில், பேராவூரணி பொதுக்கூட்டத்தில் அளித்தது	25—0—0
கொத்தமங்கலம் தி. மு. கழகம்	5—0—0
தேவாரப்பன்பட்டி சி. சோமசுந்தரம்	10—0—0
திருப்பூர் டி. என். ஆர். சாமி	1—0—0
புதுச்சேரி சு. பெருமாள்	5—0—0
,, டி.எம் கன்னையன்	5—0—0
,, ச. சிவப்பிரகாசம்	2—0—0
,, நா. ராஜாராம்	2—0—0
,, கோ. பாண்டியன்	2—0—0
,, வ. குளோவிஸ்	2—0—0
,, ஏ. நடராசன்	2—0—0
,, ந. கோவிந்தசாமி	1—0—0
,, இரா. நக்கீரன்	1—0—0
,, சி. கோவிந்தராசு	1—0—0
,, ரா. ராதாகிருஷ்ணன்	1—0—0
,, வ. முனுசாமி	1—0—0
,, இ. சீனிவாசன்	1—0—0
,, செ. கோவிந்தராசன்	1—0—0
,, பியேர்	1—0—0
,, லினியான்	1—0—0
,, சகோ் ஏவுதமன்	1—0—0
,, இ ச. மாண்மெளி	1—0—0
,, இரா. நடேசன்	1—0—0
,, ப. கனகலிங்கம்	1—0—0
,, கோ. ராமச்சந்திரன்	1—0—0
,, ராச. பெரியசாமி	1—0—0
,, வை. கணேசன்	1—0—0
,, பெ. குப்புசாமி	1—0—0
,, சு. மன்னர் மன்னன்	1—0—0
,, தி. ந. ராமச்சந்திரன்	1—0—0
,, கா. பெருமாள்	1—0—0
,, டி. பி. ஸ்ரீதரன்	1—0—0
,, கோ. சடகோபன்	1—0—0
,, உ. வெ. பாலசுப்ரமணியம்	1—0—0
,, சுப்பு கனகசபை, சுப்ரமணியன், துளசிங்கம், வில்பிரான்ஷ், சாமிநாதன், சொ. சுப்ரமணியன், ராதா ஆகியோர்	3—0—0
புதுவை-முத்தியால்பேட்டை ஏ. வைத்தியநாதன்	2—0—0
,, எஸ். குப்புசாமி	1—0—0
,, கா. கோவிந்தசாமி	1—0—0
,, எஸ். வெங்கடராமன்	1—0—0
,, ஏ. என். ஆனிப்	1—0—0
சித்தலவாய் மு. ராசமாணிக்கம்	1—0—0
தஞ்சாவூர் ஏ. வி. பதி மூலம் வரவு: 4—1—54-ந் தேதி 'நம் நாடு' இதழில் தனியாக வந்துள்ள விவரப்படி	538—0—0
கோவை தங்கவயல் அண்ணா அறிவு மன்றம்	10—0—0
வெள்ளனூர் தி. மு. கழகம்	5—8—0
,, தி. மு. கழக அனுதாபிகள்	2—0—0
கொடைக்கானல் எம். பி. அப்துல் கரீம்	1—0—0
ஆண்டிப்பட்டி இளங்கோ இளைஞர் மன்றம் ப. பாண்டியன் மூலம்	14—5—0
பெங்களூர் கே. ஜி. இன்பச் செல்வன்	1—0—0
,, எம். எம். சுந்தரமூர்த்தி	1—0—0
,, குணசேகரன்	1—0—0
,, சி. கிருஷ்ணசாமி	1—0—0
,, பி. எம். கங்காதரன்—ராணி	1—0—0
எடமேலையூர் தி. மு. கழகம்	5—0—0
சென்னை எஸ். வி. அம்பாள் கம்பெனி உரிமையாளர் தோழர் எஸ். எஸ். பி லிங்கம் அவர்கள் மூலம்:	
எஸ். கணேசன் அன் சன் உரிமையாளர் டபிள்யூ பி. ரத்தினவேலு	25—0—0
சுந்தரராசன்	3—0—0
சுப்ரமணியன்	2—0—0
அங்கப்பன்	2—0—0
வெங்கடேசன்	1—0—0
அங்கமுத்து	1—0—0
பாலசுப்ரமணியன்	1—0—0
எஸ். வி. அம்பாள் கம்பெனித் தோழர்கள்:	
எம். இளையபெருமாள்	5—0—0
எஸ். எம். குப்புசாமி	5—0—0
கே. நாராயணசாமி	5—0—0
பி. சின்னதம்பி	5—0—0
வி. பத்மநாபன்	3—0—0
எம். ஏழுமலை	2—0—0
ஜி. சுப்ரமணியன்	2—0—0
பட்டிவீரன்பட்டி தி. மு. கழகச் சார்பில் நடந்த பொதுக்கூட்ட வசூல் அ. பொன்னம்பலனார் மூலம்	95—4—0
மேற்படி பொதுக்கூட்டத்தில் மாலை ஏலம் விடப்பட்டதில்	10—12—0
,, டி. எஸ். எஸ். மீனாட்சிசுந்தரம்	5—0—0
,, எஸ். டி. பாண்டியராசன்	1—0—0
பழைய வத்தலகுண்டு தி. மு. கழகம் மாணிக்கம்	5—8—0
சென்னை திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பில் நடந்த பொதுக்கூட்ட உண்டியல் வசூல்	100—9—9
சென்னை ஸ்பென்சர் கம்பெனி ஊழியர்கள்:	
இரா. ராதாகிருஷ்ணன்	2—0—0
ஈ. ஆறுமுகம்	2—0—0
எஸ். எம். கண்ணபிரான்	1—0—0
சி. எம். சம்பந்தன்	1—0—0
பி. கச்சிரவேலு	1—0—0
எஸ். நடேசன்	1—0—0
எஸ். ஜெயராமன்	1—0—0
பி. கோவிந்தசாமிராஜ்	1—0—0
கே. ஜெயராமன்	1—0—0
வேலூர் சி. விஸ்வநாதன்	1—0—0
எஸ். சுப்ரமணியன்	1—0—0
சண்முகம், பாலசந்திரன், நீலமேகம், ஓட்டல் குமாஸ்தாக்கள், வேதகிரி ஆகியோர்	2—8—0
ஆக மொத்தம் ரு	11,268—9—7

நாடக மன்றத் துவக்க விழா

திருப்பூர், ஜன. 9—

1—1—54ல், தோழர் எம். என். அண்ணா தலைமையில் நாடக மன்றத் துவக்கக் கூட்டம் நடைபெற்றது. மன்றத்திற்கு 'இளங்கோ நாடக மன்றம்' என பெயரிடப்பட்டது. தூத்துக்குடி, கல்லக்குடி, கழக நிதி நாடகங்களுக்கு மட்டுமே முதலில் நாடகங்களை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இறுதியில் தோழர் சிந்தனைச் செல்வன் நாடக மன்றத்தின் அவசியம் குறித்து விரிவுரையாற்றினார். (ந-நி)

சூடானின் முதல் சர்க்கார்

கார்டூம், ஜன. 9—

ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தத்தின்படி சூடானில் முதல் சர்க்கார் உறுதி எடுத்துக் கொண்டு பதவி ஏற்றது.

நியாய விலையில் கைத்தறி விற்பனை

சென்னை, ஜன. 10—

அன்பன் தையல் நிலையத் தோழர் எம். என். கே. உலகநாதன் (4-வது வட்ட கழக நிர்வாக உறுப்பினர்) தனது தையல் நிலையத்தில் கைத்தறித் துணி விற்பதோடு, மேற்படி துணிகளைக் குறைவான கூலிக்குத் தைத்தும் கொடுக்கிறார். ஆகையால் இந்த வாய்ப்பைத் தோழர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தோழர் டி. ஆர். சந்திரன் கேட்டுக் கொள்கிறார்.

* * *

10—1—54 அன்று காலை 8 மணிக்கு 8-வது வட்ட திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தினர் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் அன்பழகன், இராதிரன், பாசமணி, சமாசம் (ஐயர்) வாசுவரப்பன் ஆகியோர் கைத்தறி ஆடைகளை விற்றனர். பொங்கலன்று ஏழைகளுக்கு உணவளிப்பதாகவும் இருக்கிறார்கள்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை நிகழ்ச்சிகள்

,, 12 : சென்னை சேத்துப்பட்டு
,, 13 : சென்னை
,, 14 : சென்னை— பொங்கல் விழா
,, 15 : காஞ்சி — பொங்கல் விழா — மதியழகன் வரவேற்புக் கூட்டம்
,, 16 : கடலூர் — பொங்கல் விழா
,, 17 : சிதம்பரம்

பகிரங்க விற்பனைக்குச் சர்க்கரை

புதுடில்லி, ஜன. 8—

சர்க்கரை ஆலைகளில், 1953 டிசம்பர் 16-ந் தேதியிலிருந்து 31-ந் தேதிவரை உற்பத்தியான சர்க்கரை முழுவதையும் பகிரங்க விற்பனைக்கு விடுவிக்கப்பட்டது.

கடலூரில் திராவிடர் திருநாள்

16—1—54 சனி காலை 9 மணிக்கு

இடம்: நியூ சினிமா

தலைவர்: தில்லை-வில்லாளன்

பேசுவோர்:
மு. கருணாநிதி
அருண்மொழி

இன்னிசை:
ஜி. சாந்தகுமாரி குழுவினர்

கட்டணம்: அணா 8, 4.

★

16—1—54 சனி மாலை 5 மணிக்கு

தலைவர்:
ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
கே ஏ. மதியழகன்
சி. வி. இராசகோபால், எம். சி.

வரவேற்பாளர்:
இரே. இளம்வழுதி

நாவலர் பாரதியாருக்கு பொன்னாடை போர்த்தல்

டாக்டர் அ. சிதம்பரநாதனார் வேண்டுகோள்

நாவலர் பாரதியார் பாராட்டு விழா பற்றி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்ய முன்வந்திருப்பது மிகவும் பாராட்டுதற்கு உரியதே.

பெயர்திரு. பாரதியார் அவர்களிடம் கற்ற மாணவர்களும் ஏனைய தமிழ் மக்களும் பேராசிரியர் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். பாரதியார் அவர்கள் அஞ்சா நெஞ்சோடு நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் உழைத்ததையாவரும் அறிந்ததே. அவர்கள் எம். ஏ. தேர்வுக்கெனஎழுதிய கட்டுரையிலேயே அந்த உரமுடைய உள்ளம் வெளிப்பட்டுவிட்டது. வக்கீல் தொழிலில் அவர்கள் இருந்த ஞான்றும், தமிழுக்கென நேரம் ஒதுக்கி ஆராய்ச்சி செய்து தமிழணங்கிற்கு அணிகலன்கள் வருந்தைத அறிஞர்கள் அறிவர். பின்னர், 1933 செப்டம்பர் முதல் 1938 முடிய ஐந்தாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்த பொழுது அவரால் தமிழ்த் தாய்க்குச் செய்யப்பட்ட தொண்டுகள் பற்பல. 1933 முதல் 1935 முடிய அவர்களுடைய மாணவருள் ஒருவனாய், எம். ஏ, (தமிழ்) வகுப்பிற் படிக்கும் பேறு யான் பெற்றேன். அந்த ஐந்து ஆண்டுகளில், என் தோழர் பலர் அவர்களிடம் தமிழ் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற்று, இப்பொழுது நல்ல நிலைகளில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் செய்யும் சிறப்பிற் கலந்து கொள்ளவேண்டிய கடமையுடையார்.

17—1—54 ஞாயிற்றுக் கிழமையன்று இவ்விழா நடக்க இருப்பதால், பேராசிரியர் பாரதியார் அவர்களுடைய மாணவர் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற பொருளை விழாக் குழுவின் தலைவருக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன்.

முகவரியாவது:- திரு. பி. பழநியப்பன், விவேகானந்த அச்சகம், 48, மேலமாசிவீதி, மதுரை

இந்திய மாணவர்களுக்கு விவசாயப் பயிற்சி அளிக்க நியூசிலாந்து முன்வந்துள்ளதென்ற செய்தியை, மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் தெரிவித்து, அவர்களின் யோசனையைக் கேட்டுள்ளது.

வெளி நாடுகளுக்கு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள்; கர்ணம் எழுதியதை கலெக்டர் மாற்றியதுண்டா?"

★

காவேரிக் கரையோரத்தில் பம்பு செட்டுகள் உபயோகித்து 600, 700 ஏகரா நிலத்தில் விவசாயம் செய்து வந்தவர்களுக்கு இப்போது ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பம்பு செட்டுகள் உபயோகிக்க லைசென்ஸ் தர மறுக்கப்படுகிறது புகளூரில் சர்க்கரை ஆலை மூடப்பட்டிருக்கிறது. கரும்பு கிடைக்கவில்லை என காரணம் கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். காவேரிக் கரையில் பம்பு செட்டுகள் வைத்து விவசாயம் செய்ய தண்ணீர் உபயோகித்து வந்தவர்களுக்கு இப்போது லைசென்ஸ் மறுக்கப்படுகிறது. போதுமான தண்ணீர் இல்லை யென்பதற்காக இப்படிக் கூறப்படுகிறதென்றால் அர்த்தமுண்டு; அப்படி இல்லை; ஆனால், 'கொள்கை மாற்றப்பட்டிருக்கிறது,' என்று காரணம் கூறப்படுகிறது. அங்கிருக்கும் (நேற்று மாலை விவசாயிகள் இங்கு வந்து அழுது விட்டுப் போகிறார்கள். முன்பு தண்ணீர் தாராளமெனக் கூறிய எஞ்சினியரே இப்போது மாறி விடுகிறார்; அவருக்கு, யாரோ, ஏதோ சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும். பம்பு செட்டுக்கு முதல் போட்டு வாங்கி, லைசென்ஸ் இழப்பதோடு, தண்டத் தீர்வையும் கட்டி, இப்போது கோர்ட்டுக்கு விவசாயிகள் இழுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி இருந்தால் அவர்களுக்கு நம்மிடம் நல்லெண்ணம் எப்படிப் பிறக்கும்? அவர்களோடு இருக்கும் உற்றார் உறவினர்களுக்கும்நம் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்யும்."

"நான் இப்படிப் பேசுவதைப் பார்த்து, மந்திரிகள் எனக்கு வேண்டாதவர்கள் என்ற நோக்கில் பேசுகிறேன்,' என்று குழப்பிக் கொள்ளவேண்டாம்; யார் மந்திரியாக இருந்தாலும், மக்கள் குறைகளை எடுத்துச்சொல்லி நிவாரணம் தேடுவதுதான் நம் கடமை. வேண்டியவர்கள் — வேண்டாதவர்கள் என்ற குழப்பத்திற்கு இதில் இடமில்லை இதைப்பற்றி குழப்பக் கூடாது"

திருப்பத்தூர் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு......

பொங்கல் விழா பரிசு

திருப்பத்தூர் (வ. ஆ.), ஜன. 9—

7—1—54-ல், இவ்வூர் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு, நகர சுகாதார ஆபீசில், தலைவர் வி. என். வீரபத்திரனார் முன்னிலையில் பொங்கல் விழாவை முன்னிட்டு, அனைத் தலைவர் ஜனாப் அப்துல்அக்சாயபு அவர்கள் உடைகள் வழங்கினார். நகர சபை நிதியிலிருந்து தொழிலாளர்களுக்குக் கடனாக உறுப்பினர் தோழர் கே. பி. ராமநாதன் பணம் வழங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்திற்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.